ஸ்ரீ

ஸ்ரீவரவரமுநேயநம:

கெருடப்பத்து,

கஜேந்திரமோக்ஷக் கீர்த்தனை.

கோன்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என், சி.

ஸ்ரீ

கெருடப்பத்து.

ஓம்பூரணனே பதினாறு திங்கட்சேரும்
  பொருந்திய யருக்கன் பதினெட்டுஞ்சேரும்
காரணனே கருமுகில்போன் மேனிசேரும்
  கருணைபெரு மஷ்டாட்சரங் கலந்துவாழும்
காரணனே லட்சுமியோ டெட்டுஞ்சேரும்
  மதிமுகம்போல் நின்றிலங்கும் மாயாநேயா
ஆரணனே ரகுராமா கெருடன்மீதில்
  அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. க

மந்திரமோ டஷ்டசித்து மெட்டுஞ்சேரும்
  வாழ்கிரக மொன்பதுமே வந்துசேரும்
கந்திருவர் கணநாத ராசிவர்க்கம்
  கலக்கியான நால்வேதங் கலந்துவாழும்
நந்திமுதற் றேவர்களுங் கவனயோகம்
  நமஸ்கரித் துன்பாதம் நாளும்போற்ற
அந்தரமாய் நிறைந்திருக்குங் கெருடன்மீதில்
  அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. உ

மூலமுத லோரெழுத்து நீர்தானாகும்
  மூன்றெழுத்து மைந்தெழுத்து மொழியலாமோ
சீலமுதல் ஓம் அங் உங் மங் றிங்கென்றே
  சிவனுடைய திருநாமம் நீர்தானாகும்
காலமுதல் ஓம் அங் உங் மங் றிங்கென்றே
  கருணைபெரு மிவ்வெழுத்து நீர்தானாகும்

ஆலவிஷங் கையேந்துங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௫
நவ்வென்றும் கிலியென்றும் ஓம்சிவாயமென்றும்
நமநமசிவசிவ ரார ரா வென்றும்
சவ்வென்றும் ஓங்கார ரீங்காரமாகித்
தவமுடைய விவ்வெழுத்து நீர்தானுகும்
ஓவ்வென்றும் ஓம்நமோ நாராயணுவென்றும்
உன்பாத முச்சரித் துகந்துபோற்ற
அவ்வென்று ரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௬
உதிக்கின்ற சிவசொரூப முனக்கேயாகும்
ஓம் அவ்வும் உவ்வுங் கிலியுமென்றே
பதிக்கிசைந்த ஐந்தெழுத்தை வெளியில்விட்டே
பச்சைமுகில் மேனியனே பணிந்தேனுன்னை
விதிக்கிசைந்த மெய்ப்பொருளே அரிகோவிந்தா
விளக்கொளிபோல் மெய்த்தவமே விரும்பித்தாதா
அதற்கிசைந்த நடம்புரியுங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௭
வேதமுக லாயிருந்த சிங்கரூபம்
விளங்குகின்ற விரணியனை வதையேசெய்தாய்
பூதமுத லாம்பிறவும் புண்யநேயா
புகழ்ந்தவர்க்குத் துணைவருவாய் சோதைபுத்ரா
நாதமுதல் விந்துவா யுலகுக்கெல்லாம்
நயம்பெறவே நிறைந்திருக்கும் வாதபிர்ம
நயந்தவன்போல் நிறைந்திருக்குங் கெருடன்மீதில்

அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௬
முக்கோண நாற்கோண மொழிந்தைங்கோண
முச்சுடரே யறுகோண மெண்கோணமாகும்
சட்கோண நாற்பத்து மூன்றுகோணம்
தந்திரமுஞ் சிதம்பரமுஞ் சகலசித்தும்
இக்கோண மிதுமுதலாய் வகாரமட்டும்
இறையவனாய்த் தானிருந்து ரட்சித்தாலும்
அக்கோண மீதிருந்து கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௭
பச்சைமுகில் மேனியனே யுனக்கேயிந்தப்
பார்தனிலே பத்தவ தாரமுண்டு
மச்சமென்றுங் கூர்மமென்றும் வராகமென்றும்
வாமனென்றும் ராமமென்றும் பவுத்தனென்றுந்
துட்டரை யடக்கிமோகினி வேடங்கொண்டாய்
தோன்றினாயுன் சொரூபமெல்லா மறிவாருண்டோ
அச்சந்தீர்த் தெனையாளக் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௮
வேதியனாய்த் தோன்றிவந்தாய் மாபலிக்கு
விண்ணவர்க்காய் நரசிங்க ரூபமானாய்
சாதியிலே ராகவனாய்க் கிருஷ்ணனாகத்
தானுதித்து வந்திருந்தாய் தாரணிவாழ்க
சோதனைகள் பார்த்திடுவோர் துதிப்போர்தம்மைத்
துஷ்டரையும் வதைசெய்து லோகமாள்வாய்
ஆதிமுத லோரெழுத்தே கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௯

மாயவனே ரகுராமா அருகேவாவா
வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில்வாவா
காயாம்பு நிறமுடனே கனவில்வாவா
கருமுகில் மேனியனேயென் கருத்தில்வாவா
நாயகனே யென்னுவி லிருக்கவாவா
நாடோறு முன்பாதந் துதிக்கவாவா
ஆயர்குலத் துதித்தவனே கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. கO
முப்புரத்தை யெரித்தவனே இப்போவாவா
முகில்நிறனே ஜெகந்நாதா முன்னேவாவா
எப்பொழுதுந் துதிப்பவர் பங்கில்வாவா
ஏழைபங்கி லிருப்பவனே இறங்கிவாவா
ஒப்பிலா மணிவிளக்கே யொளிபோல்வாவா
ஓம்நமோ நாராயணு வுகந்துவாவா
அப்பனே ரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. கக
துளபமணி மார்பழகா சுகத்தைத்தாதா
சுருதியே மெய்ப்பொருளே வரத்தைத்தாதா
களபகஸ் தூரியனே கடாட்சந்தாதா
கஞ்சனைமுன் வென்றவனே கருணைதாதா
பழம்பொருளே சிவயோகி பாக்கியந்தாதா
பத்திமுத்தி சித்திசெய்ய வுன்பாதந்தாதா
அளவிலா மெய்ப்பொருளே கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. கஉ

கெருடப்பத்து முற்றிற்று.

ஸ்ரீ

வரவரமுநயேநம:

கஜேந்திர மோட்சக்கீர்த்தனை.

இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

மூலமென்றழைத்த யானையைக்காத்தருள்
முகுந்தனைப்பணி நெஞ்சே.

அநுபல்லவி.

சீலமேவுபத்மாசனன் வணங்கும்
திருவரங்கத்தாவணைமிசை யுறங்கும்
நீலமேனியனைநிரைபரஞ் சோதி
நித்தியநிர்மலநிராமய ஆதி-முதல்

சரணங்கள்.

மழையெனமும்மதம் பொழியுப் விகடகட
மத்தகசங்கள் தோடி-இரு
மருங்குமணியணியாய் நெருங்கித்தொடர்ந்து
வரவனத்தினில் நடந்தோட
எழுகடலாமென அலைகள்பொன்மணிகொழித்
தெறியுமடுவைத் தேடி-வண்
டிரைக்கமலம்விண்டுகாக்குஞ் செந்தே
னிறைந்திணிகதண்புனல் நாடி
அழகோடிறங்கியதில்முழுகியே பைய
அலப்பத்தணியப்பலஜலக்கிரீடை செய்ய
முதலைப்பிடித்தளவிற்கதறியே யுய்யமூல

காலனைப்போலுக்ர மாணகராவினைக்
கண்டதனோ டிவெகு
காலமனுவளவும்வெறுப்புச் சலிப்பில்லாமற்
கடுமையோ டோடி
ஸ்தூலசிகரமகமேரு நிகருடனுஞ்
கப்பல்போல் வாடுக்கால்
துவண்பேராக்கிரமங் குழைந்துநடுங்கிவிழி
சொருகிக்களை மூடி
ஞாலவேலெதிர்த்ததீவினைப் பழுது
நமக்கென்றுதலைமிசைதுதிக்கவைத் தழுது
ஓலமிட்டண்டசராசர முழுதும்
உடையவனெனவன்கதியென்று தொழுது
அடுத்துச்செவியில்வந்து நுழைய-அபய
மென்னும்அந்தக்குரலைக் கேட்டுபால்
அலைதவழாழியிற்பெரிய பிராட்டியோ
டாடியவிளை யாட்டு
விடுத்துபர்கருடன்மே லேறியாயிரம்படம்
விரித்தெழுமணிச் சூட்டுச்சேஷ
மெத்தைதுறந்துதிருமார்பிற் பளபளென
விளங்கியஎழில் காட்டி
வடத்தணிகவஸ்துவமதையப் பொன்னுடை
வயங்கப்பசுந்துளபப்பரிமள வாடை
எடுத்திடவுருசெந்தாமரை ஓடை
எனச்சிறந்திடஷணத்தொழிப் பீடை

மிக்ககதிர்ச்சூரியனுந்தன் ஒளிமழுங்கிடபிர
மித்துகண்கள் கூச-முடி
மீதுகவித்தநவரத்ன நெடுமகுடம்
விண்ணிடைவெளியில் வீச
எரிமணிப்பிரபைத்தாழவாகுவலம் மேகத்
திந்திரனுமிசை ஏகக்கையில்
ஏந்தியபாஞ்சசன்னியம் சக்கராயுத
மிளங்கிட கைலாச
வரையுரைசிவன்முத லோரிதுவென்ன
மாயமோவென்றிறைஞ்சித்தோத்திரம் பன்னத்
திரிமுகம்வேர்த்துளக்குறுநகை துன்ன
சித்திரமிரங்கிக்கிருபைபெருகியே மின்ன-மூல
காதினிற்குண்டலஜாதியினே விருள்
பாதலத்தன் ஞேட-மிகக்
ககனவர்மலர்மாரிசொரியத் தேவ
கானங்கின்னரர் பாடக்
கோதறவயிற்றில்வைத்திடு சகலாண்டமுங்
குலுங்கநான்மறை தேடச்செழுங்
கொத்துமலர்மாலை சரித்திட-அந்தர
துந்துபியொலி நீட
மாதவர்களித்தாடவேகமோடு சென்று
மரகதமலைபோலெதிர் நின்று
நீதிதைத்தஞ்சாதேயஞ்சாதே யென்று
நெரியமுதலையைக்கொன்றிடுந்தொலைத் தன்று

கஜேந்திரமோட்சக்கீர்த்தனை முற்றிற்று.